**DEPOSITION OF WITNESS**
**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**
**Deposition of witness plaintiff / defendant**

**O.S No. 103/2020**

Solemnly affirmed to Thiru/Tmt.
of this court in accordance with the provision of Act of 1972
04.01.2025

| | |
|---|---|
| Name : அனுசியா | Caste : |
| Father's Name : மாரிமுத்து | Calling: |
| District | Religion : |
| | Age: |

**CHIEF EXAMINATION : CW1**

நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு நீதிமன்றத்தில் அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

நான் முதலில் தாக்கல் செய்த அறிக்கையில் சர்வேயர் கொடுத்த ஆவணங்களுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த அறிக்கையில் வாதியின் அனுபவம் எத்தனை செண்டு என்றும், பிரதிவாதிகள் அனுபவத்தில் எத்தனை செண்டு உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த முதல் அறிக்கை 09.12.2022ம் தேதி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இரண்டாவது சர்வேயர் கொடுத்த வரைபடத்துடன் மெமோவாக 03.10.2023ம் தேதி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வேயருக்கு படி கட்டிய போது வாதி, பிரதிவாதிகள் அனுபவத்தை பிரித்து காண்பிக்க எதுவும் சொன்னேனா என்றால் இல்லை. சர்வே எண் 131/1 B ல் இடத்தை சுற்றளவு முதலில்

அளந்தோம் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு வாதியோ பிரதிவாதியோ எவ்வளவு அனுபவத்தில் உள்ளார்கள் என்று அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

2. இரண்டாவது தாக்கல் செய்யப்பட்ட மெமோவை யார் கூறி நான் தாக்கல் செய்தேன் என்றால் சர்வேயர் கொடுத்த ஆவணங்கள் அடிப்படையில் நான் தாக்கல் செய்தேன். எனது மெமோவில் 25 செண்டு மட்டுமே பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பிரதிவாதிகள் 25 செண்டு மட்டும் அனுபவம் செய்து வருகிறார் என்பதை அளவீடு செய்து பார்த்தோமா என்றால் இல்லை சுற்றளவு அத்துமால் மட்டுமே பார்த்தேன். நீதிமன்ற ஆணையரை பொறுத்தவரை வாதி மற்றும் பிரதிவாதிகள் எவ்வளவு அனுபவத்தில் உள்ளார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல வேண்டியதில்லை என்றால் சரிதான். நான் முதல் தாக்கல் செய்த வரைபடத்தில் எரிந்த நிலையில் மரங்கள் இருப்பதாக காண்பித்துள்ள மரங்கள் வேலியாக இருந்தவையா என்றால் அதுபற்றி கணிக்க இயலவில்லை.

S.d./Anusiya
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.